

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.10.2025) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 22 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உட்பட 25 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சர்வதேச அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காகவும், 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வாங்குவதற்காகவும் மொத்தம் 33 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 43.20 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.



திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு–76, குயப்பேட்டை, படவட்டம்மன் கோயில் தெரு சென்னை உயர்நிலைப் பள்ளியில் சிங்காரச் சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.5.96 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளிக் கட்டடத்தை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (24.10.2025) , பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, அங்கு பயிலும் மாணவர்களுக்கு கல்வி உபகரணத் தொகுப்பினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஆ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்காக

# ரூ.4.05 கோடியில் 45 புதிய வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, அக். 25-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.10.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககத்தின் மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 45 புதிய வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம், தாய் சேய் சுகாதார சேவைகள், தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல், தொற்று அல்லாத நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், சுகாதார நடவடிக்கைகள் போன்றவற்றின் மூலம் தமிழ்நாட்டு மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

அரசின் திட்டங்களை செயல்படுத்துவதற்கு பொதுமக்களுக்கு தரமான மற்றும் பயனுள்ள பொது சுகாதார சேவைகளை வழங்குவதில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டங்களில் அனைத்து நோய்த் தடுப்பு மற்றும் சுகாதாரப் பராமரிப்பு நடவடிக்கைகளையும் பொருத்தமான திட்டமிடல், திறம்பட செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் மூலம் மாவட்டங்களில் சுகாதார இலக்குகளை அடைவதில் மாவட்ட சுகாதார அலுவலர்கள் முக்கிய பொறுப்பு வகிக்கின்றனர்.

மாவட்ட சுகாதார அலுவலர்கள் நோய் கண்காணிப்பு பணிகள், ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வு, வட்டார அளவிலான ஆய்வு கூட்டம் மற்றும் இதர கள ஆய்வு போன்ற பணிகளை தினந்தோறும் மேற்கொண்டு வருகின்றனர். எனவே, மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்கு வாகனம் இன்றியமையாததாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தின் மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு சுகாதார திட்ட நிதியின் கீழ் 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 45 புதிய வாகனங்களின் சேவைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் திட்ட இயக்குநர் மரு. சு.வினீத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் மரு.எ.சோமசுந்தரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில்

# வடகிழக்குப் பருவமழையின்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்!

## நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் ஆய்வுக் கூட்டம்!



**சென்னை, அக்.25-**

**நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்கே.என்.நேருதலைமையில்தமிழ்நாடுகுடிநீர்வடிகால் வாரியத்தின் சார்பில் வடகிழக்குப் பருவமழையின் போதுமேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்த ஆய்வுக்கூட்டம்சென்னைஎம். ஆர்.சி.நகரில்உள்ளநகராட்சி நிருவாக இயக்குநரகத்தில் நேற்று (24.10.2025) நடைபெற்றது.**

*தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியத்தின்மூலம்562 கூட்டுக்குடிநீர்திட்டங்கள் வாயிலாக 16 மாநகராட்சிகள், 72 நகராட்சிகள், 327 பேரூராட்சிகள்,47,465ஊரகக் குடியிருப்புகளுக்கு நாளொன்றுக்குவடிவமைக்கப்பட்ட குடிநீர்அளவான 2,757மில்லியன்லிட்டருக்கு நாளொன்றுக்குசுமார்2,248 மில்லியன்லிட்டர்பாதுகாக்கப்பட்டகுடிநீர்5.28கோடி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.*

*தற்போது பெய்த வடகிழக்குபருவமழையினாலும், ஆற்றங்கரைகளில்ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினாலும் பாதிக்கப்பட்டகூட்டுக்குடிநீர் திட்டங்களின் நிலை குறித்துஅமைச்சர்அவர்கள் கேட்டறிந்தார். பாதிக்கப்பட்ட89கூட்டுக்குடிநீர்திட்டங்களில், 56 திட்டங்கள் சரிசெய்யப்பட்டு, மீதமுள்ள 33 திட்டங்களை சரி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களை போர்க்கால அடிப்படையில் சரி செய்து மக்களுக்கு வடிவமைக்கப்பட்ட அளவை வழங்க அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.*

*மேலும்,பருவமழைக்காலங்களில்முன்னெச்சரிக்கைநடவடிக்கையாக போதிய கிருமிநாசினிகளை (குளோரின்) பயன்படுத்துதல், டீசல் ஜெனரேட்டர்களைதயார்நிலையில்வைத்தல்,குழாய்பழுதுகள்மற்றும் வெடிப்புகளை உடனடியாக சரிசெய்தல், உள்ளாட்சி அமைப்புகளோடு அலோசனை செய்தல் போன்றவற்றை மேற்கொண்டு மக்களுக்கு வடிவமைக்கப்பட்ட குடிநீர் அளவினை வழங்குமாறு ஆலோசனை வழங்கினார்கள்.*

*மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம்31கூட்டுக்குடிநீர்திட்டங்கள்மற்றும்10பாதாளச் சாக்கடை திட்டங்களின் பணி முன்னேற்றங்களின் நிலை குறித்து அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். மேற்காணும் திட்டங்கள் குறித்த காலத்திற்குள் பயனுக்கு கொண்டுவரவும், பொதுமக்களுக்குபாதுகாக்கப்பட்டகுடிநீர்வழங்கவும் அறிவுரை வழங்கினார்.*

*இக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், முனைவர் தா.கார்த்திகேயன், அரசு சிறப்பு செயலாளர், சு.கணேஷ், இயக்குநர்,நகராட்சிநிருவாகம் ப.மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். ஜி.எஸ். சமீரன், இயக்குநர், பேரூராட்சிகள், மா.பிரதீப் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியஇணைமேலாண்மை இயக்குநர்ஆனந்த்மோகன், வாரியபொறியியல்இயக்குநர், வி.சண்முகராஜா, வாரியத்தின் தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வைப் பொறியாளர்கள்,நிருவாகப் பொறியாளர்கள் மற்றும் பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

# வடபழனி கோயிலில் 108 மாணவியரின் கந்தசஷ்டி பாட்டு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!



*சென்னை,அக்.25-*

*இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (24.10.2025) வடபழனி கோயிலில் கந்த சஷ்டி பெருவிழாவை முன்னிட்டு, கொளத்தூர் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 108 மாணவியரின் கந்த சஷ்டி நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சிக்கு பின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்த மாணவிகளுக்கு பரிசுப் பொருட்களை வழங்கினார்.*

*பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,*

*இந்து சமய அறநிலையத் துறை சார்பிலும், பழநி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பிலும் அரசின் நிதியுதவியோடு, 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் தீர்மானத்தின்படி, திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவச் செல்வங்கள் கந்த சஷ்டி பெருவிழாவின்போது, முருகன் திருக்கோயில்களில் கந்த சஷ்டி பாராயணமும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோயில்களில் திருப்பாவை பாராயணமும் செய்து வருகின்றனர்.*

*2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் வடபழனி மற்றும் கந்தக்கோட்டம் திருக்கோயில்களில் இசை கல்லூரி மாணவ, மாணவியர்களை கொண்டு கந்த சஷ்டி பாராயணம் நடத்தப்பட்டது. கடந்தாண்டு 12 முருகன் திருக்கோயில்களில் 763 மாணவச் செல்வங்கள் கந்த சஷ்டி பாராயணம் செய்தனர். அதனை தொடர்ந்து, இன்றைய தினம் வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் கொளத்தூர் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சேர்ந்த 50 மாணவிகளும், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 58 மாணவிகளும் என மொத்தம் 108 மாணவியரின் கந்த சஷ்டி பாராயணம் செய்தனர். இந்தாண்டு 24 முருகன் திருக்கோயில்களில் 29 பள்ளி மற்றும் கல்லூரிகளை சார்ந்த 2,432 மாணவச் செல்வங்கள் கந்த சஷ்டி பாராயணத்தை செய்து வருகின்றனர். ஆண்டுதோறும் மாணவச் செல்வங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகு, தமிழ் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் 139 திருக்கோயில்களுக்கு இதுவரையில் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக இன்று வரை 3,715 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடந்தேறி இருக்கின்றது. ஆக்கிரமிப்பிலிருந்து இதுவரை ரூ.8,030 கோடி மதிப்பிலான 7,985.12 ஏக்கர் திருக்கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மாநில வல்லுநர் குழுவால் 14,221 திருக்கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த நான்கரை ஆண்டுகளில் 12,451 திருக்கோயில்களில் ரூ. 7,091 கோடி மதிப்பீட்டில் 28,314 திருப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் ரூ. 4,021 கோடி மதிப்பிலான 15,473 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. உபயதாரர் திருப்பணியை எடுத்துக் கொண்டால் இதுவரை ரூ.1,547.57 கோடி மதிப்பிலான 11,904 திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இது அரசின் மீதான உபயதாரர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.*

*அறுபடை வீடுகளுக்கு ரூ. 3.39 கோடி அரசு நிதியில் 3,015 மூத்த குடிமக்கள் கட்டணமில்லாமல் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட 2000 மூத்த குடிமக்களுக்கான அறுபடை வீடு ஆன்மிக பயணத்தில் 1,000 நபர்கள் நிறைவு செய்துள்ளனர். மீதமுள்ள 1,000 நபர்கள் வரும் பிப்ரவரி மாதத்திற்குள் அழைத்துச் செல்லப்படுவர்.*

*அதேபோல் பெருந்திட்ட வரைவு பணிகளின் கீழ். முருகன் திருக்கோயில்களில் மட்டும் ரூ. 967 கோடி மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. திருப்பரங் குன்றம், திருச்செந்தூர், பழனி, மருதமலை, குன்றத்தூர், வடபழநி, சிறுவாபுரி, வயலூர் என முருகன் திருக்கோயில்கள் உள்பட 3,715 திருக்கோயில்களுக்கு திராவிட மாடல் ஆட்சியில் தான் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. வரும் 2026 பிப்ரவரி மாதத்திற்குள் குடமுழுக்கு எண்ணிக்கை நிச்சயமாக 4,000 திருக்கோயில்களை எட்டும்.*

*சூரசம்காரத்தின் போது மிக அதிகளவில் பக்தர்கள் வருகை தருகின்ற திருக்கோயிலாக திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திகழ்கிறது. ஆகவே இத்திருக்கோயிலில் ஏற்கனவே பணிபுரிந்த 4 இணை ஆணையர்கள் சிறப்பு பணிக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று பாதுகாப்பு பணிக்கு கூடுதலாக காவல்துறையினரை பணியமர்த்தி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திருக்கோயிலில் திருப்பணிகள் 80 சதவீதத்திற்கு மேல் முடிவுற்றிருப்பதாலும், தங்கும் அறைகள், கழிப்பறைகள் குளியலறைகள் தயாராக உள்ளன. திருக்கோயில் வளாகத்தில் ஆறு நாட்கள் தங்கி சஷ்டி விரதம் கடைபிடித்து, சூரசம்காரம், திருக்கல்யாணம் காணும் பக்தர்களுக்காக 13 இடங்களில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன.*

*திருக்கோயில் சார்பிலும், நகராட்சி சார்பிலும் குப்பைகளை உடனடியாக அகற்றிட தூய்மை பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர். வருகின்ற பக்தர்களை கணக்கிட்டு சிறப்பு பேருந்துகள் தினந்தோறும் இயக்கப்படுவதோடு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளும், மருத்துவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன. இப்படி அனைத்து வகையிலும் முருக பக்தர்கள் மனம் குளிர்கின்ற வகையில் சூரசம்கார நிகழ்வுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன அனைத்து தொலைக்காட்சிகளுக்கும் பாரபட்சமின்றி திருக்கோயிலில் நடைபெறுகின்ற சூரசம்கார நிகழ்வை ஒளிபரப்பு செய்வதற்கு இந்து சமய அறநிலையத்துறை அனுமதி வழங்கி இருக்கின்றது.*

*திருத்தணி திருக்கோயிலை பொறுத்த அளவில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் பல ஆண்டுகாலம் செயல்பாட்டிலே இல்லாமல் இருந்த வெள்ளி திருத்தேர் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. பெருந்திட்ட வரைவின் கீழ் பல்வேறு திருப்பணிகள் நடைபெற்ற வருகின்றன. திருக்கோயிலுக்கு மாற்று மலைப்பாதை அமைக்க அரசு ரூ. 58 கோடி நிதி வழங்கியுள்ளது.*

*திருத்தணி திருக்கோயில் குட முழுக்குக்கு முன்பாக பக்தர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்ற பணிகள் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் மயிலை த. வேலு, ஜெ. கருணாநிதி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் திருமதி சி. ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் சு. மோகனசுந்தரம், திருமதி ஜ. முல்லை, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் திரு இரா. ஹரிஹரன், மாநகராட்சி மன்ற உறுப்பினர் எஸ். பாஸ்கர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று (24.10.2025) திருவாரூர் மாவட்டம், திருக்கறைவாசல் கிராமத்தில், வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் என். கௌதமன், தாட்கோ தலைவர் இளையராஜா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, நெல்லிக்குப்பம் ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சான்றிதழ்களை வழங்கினார். அருகில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றியக்குழு தலைவர் எல்.இதயவர்மன், திருப்போரூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் எம்.சேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புச்செழியன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.